உ
சிவமயம்



மலேசியாவை பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை சித்தன்கேணியை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி கணபதிமுத்து ஜெயம்

அவர்களின் ஆத்ம சாந்தி

# நினைவு மலர்

13 – 09 – 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
09-10-1928

மறைவு
14-08-2002

# அமரர்
# திருமதி கணபதிமுத்து ஜெயம்

## திதி வெண்பா

சித்திரபானு ஆண்டு ஆடித்திங்கள்
இருபத்தொன்பதாம்புதன் வார பூர்வபட்ச
ஸப்தமி பெருநாளில் பாசமிகு அம்மையார்
ஜெயம் பிறைதாளிணையடியை சென்றடைந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்



அன்பு நிறைந்த பேரொளியாய்

இன்சொல் பேசி பண்புடனும்

நேசத்துடனும் இன்முகத்துடன்

வாழ்வாங்கு வாழ்ந்த எங்கள் பாசமிகு


அன்னையின் திருப்பாதங்களுக்கு இம்

மலரினை காணிக்கையாக்குகின்றோம்.

பிள்ளைகள்,

மருமக்கள்,

பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

### தேவாரம்

குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்த பொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகெம் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

### திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார் பிறவாமை
வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர்கெடமாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
திருச்சிற்றம்பலம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# கந்தர் ஷஷ்டி கவசம்



**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை

**குறள் வெண்பா**

*அமரர் இடர்தீர் அமரம் புரிந்த*
*குமரன் அடிநெஞ்சே குறி*

**நிலைமண்டில ஆசிரியப்பா**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசக் குறமகள் நினைவோன் வருக.
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக.
சரவண பவனார் சடுதியில் வருக.
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
வணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நவமணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரி முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள்நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புகழ்க்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுத் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
என்னைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்பதம் பெறவே உன்னருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாராத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்துஎனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்துஅமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத்து ஆட்கொள்ள எந்தன் உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

(முற்றும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

**காப்பு**

தொல்லை இரும்பிறவிச் சூழும் தலைநீக்கி
அல்லலறுத் (து) ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

**கலி வெண்பா**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க !
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க !
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க !
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க !
வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குஞ் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
ஈசன் அடிபோற்றி எந்தை அடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்று நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையில் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழ்ச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பணியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்(கு) எட்டா எழில்ஆர் கழல்இறஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்(கு) ஒளியாய்
எண்இறந்(து) எல்லை இலாதானே ! நின்பெருஞ்சீர் !
பொல்லா வினையேன் புகழுமா(று) ஒன்றறியேன் !
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருக மாகி பறவையாயப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லா அநின்றவித் தாவர சங்கமுத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா ! விடைப்பாகா ! வேதங்கள்
ஐயா, வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாமவிமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பா யருள்தருள்வாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் னேரியாய்ச் சேயாய் நணியானே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பருக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மறைந்திருந்தாயெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மென்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக் வல்லனே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையிட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து செல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கணபதிமுத்து ஜெயம் அவர்களின் வாழ்க்கை வளம்

வட்டூர் (கப்பித்தார்) எதிர்நாயகமுதலி குறிசில் உதித்த செல்லப்பா லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் புத்திரன் சுப்பிரமணியம் என்னும் நாமம் பூண்டோன் கிளாக்கர் கணபதிப்பிள்ளை அவர்களின் மகள் பொற்கொடி என்னும் தையலை மணந்து இல்லறமாகிய நல்லறத்தின் பயனாக எதிர்வீரசிங்கம், பத்மாவதி, லட்சுமி, சுருதி, கேசரி, ஜெயம், யோகம், பசுபதிநாயகி, முருகையா என்னும் ஒன்பது பிள்ளைச் செல்வங்களைப் பெற்றனர். இவர்களில் ஆறாவது புத்திரியாம் ஜெயம் 1928ம் ஆண்டு ஐப்பசிமாதம் 9ம் திகதி கேட்டை நட்சத்திரத்தில் மலேசியாவில் பிறந்தார். 1932ம் ஆண்டு தாய் நாடான இலங்கைக்கு வந்தனர். சொந்த ஊரான யாழ்ப்பாண மேற்றிசையின் நன்நகராம் வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசாமி கோவிலின் முன்னால் அமைந்த மாடிவீட்டில் வளர்ந்து வட்டு திருஞான சம்பந்த வித்தியாசாலையில் கல்வி கற்று பெண்மைக்குரிய அணிகலங்களுடன் திகழ்ந்தார்.

மூளாய் புவிராஜசிங்க முதலிகுரிசில் உதித்த வயித்திலிங்கம் அவர்களுக்கும் பார்வதி அம்மையாருக்கும் இல் வாழ்க்கையின் பயனாக நாகமுத்து சதாசிவம், முத்துப்பிள்ளை, சரவணமுத்து, ஆறுமுகம் கணபதிமுத்து என ஆறு மழலைச் செல்வங்கள் பிறந்தனர். இவர்களின் கடைக்குட்டி மகனான கணபதிமுத்துவை ஜெயம் பெற்றோரின் விருப்பத்திற்கமைய 1947ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ம் திகதி திருமணம் செய்தார். இவர்கள் இல்லறமாம் நல்லறத்தை பூவும் மணமும் போல ஒத்த மனத்தினராய் நடாத்தி வந்ததின் பயனாக பிரகேஸ்வரி, டோனேசன், விஜியலட்சுமி, சத்தியசீலன், வசந்தா, ஜெயராணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயசீலன் என்னும் ஏழு மழலைகளைப் பெற்றனர். 1951ம் ஆண்டு தன் பெற்றோரிடமிருந்து தன் வாழ்க்கைத் துணைவருடன் (எழுதுனர், அரச பண்ணை) முருங்கன் சென்றும் அங்கே 12 ஆண்டுகள் இனிதே வாழ்க்கையை நடத்தினார்கள். பின்னர் 'தனத்தை பெருக்கி இனத்தோடு வாழ்' என்ற வாக்குக்கமைய சீர்பூத்த நன்னகராம் சித்தன்கேணியில் உடன் பிறப்புக்களுடன் சிறப்புற அழகான வீடமைத்து 1963ம் ஆண்டு 'ஜெயமஹால்' இல்லத்தில் இனிய வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள் 1968ம் ஆண்டு கடைசி மகனான ஜெயசீலனைப் பெற்று பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

துணைவரின் விருப்பத்திற்கிணைந்து தம் மக்களை உரிய பருவத்தில் வித்தியாலயம் அனுப்பி அறிவுக் கல்வியை ஊட்டி புத்திரர் மூவரையும் வணிகத் தொழிலில் (டோனேசன் அன் பிறதர்ஸ் முருங்கன்) ஈடுபடுத்தி நல்வழியைக் காட்டினார்கள். தங்கள் மூத்தமகள் பிரகேஸ்வரிக்கு தனது பாடசாலை சினேகிதி பரமேஸ்வரி தெய்வேந்திரம் அவர்களின் புத்திரன் பாலசுப்பிரமணியத்திற்கும், தனது மூத்த சகோதரரான எதிர்வீரசிங்கத்தின் மகள் ஜெயஈஸ்வரியை சொந்த மருமகளாக டோனேசனுக்கும், விஜியலட்சுமியை ஸ்ரீமுருகனுக்கும், வசந்தாவை யோகேஸ்வரனுக்கும், சத்தியசீலனை நேத்திரவதிக்கும், ஜெயராணியை புலேந்திரனுக்கும், ஜெயசீலனுக்கு தனது சகோதரன் எதிர்வீரசிங்கத்தின் பேர்த்தி ஜெயக்குமார் கவிதாவையும் மாங்கல்யதாரணம் செய்து வைத்தனர். நாகலோஜினி, நிறஞ்சன், துவாகரன், கௌரிப்பிரியன், பேபிகா என்னும் பேரப் பிள்ளைகளையும் கண்டு மகிழ்வுற்றனர்.

இவர் விருந்தோம்பலுக்கமைய பசித்து வருவோரை இன் முகத்துடன் வரவேற்று உணவளித்தார். அற்றோர்க்கும், உற்றோர்க்கும் உவப்பான மொழி கூறி ஆறுதல் அளித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையார் கடைசிவரை பொறுமையைக் கடைப்பிடித்து அமைதியுடனும் அடக்கத்துடனும் வாழ்ந்தார். தன் பிள்ளைகட்கும் பொருள் போகுமிடம் புண்ணியம் என்றும் அதிகம் ஆசைப்பட்டு கஷ்டப்படாதீர்கள் என்றும் அறிவுரை கூறுவார். 1994ம் ஆண்டு ஐந்தாவது புத்திரியான வசந்தாவை இழந்து ஆறாத்துயரில் ஆழ்ந்தார். 1995இல் இடம்பெயர்ந்து மீண்டும் தங்கள் வளமான முருங்கன் மண்ணிற்கு சென்று பிள்ளைகள் எல்லோருடனும் கூடி இருக்கும் நேரத்தில் 1995ம் ஆண்டு 12ம் மாதம் 2ம் திகதி தனது அன்பிற்குரிய நாயகனை இழந்தார். அதன் பின் வலுவும் குறைந்து பார்வையும் குறைந்த அந்நிலையிலும் மனம் சோராமல் 1997ம் ஆண்டு சொந்த இடமான சித்தன்கேணி ஜெயமகால் இல்லத்திற்கு வந்து பிள்ளைகளின் அரவணைப்பில் நிறைவுடனும் மகிழ்வுடனும் வாழ்ந்து 2002ம் ஆண்டு 8ம் மாதம் 14ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.10 மணியளவில் பூர்வபக்க சப்தமி திதியில் சிவன் பாதம் சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமிகு அம்மம்மா

அன்பின் வடிவமே! சுடர்விளக்கே! பொறுமைக்கு இலக்கணமே! என் அன்பு அம்மம்மா ! உங்கள் சிரிப்பில் ஓராயிரம் பூக்கள் மலரும். நீங்கள் பொன் வாய்திறந்து கதைத்தால் எங்கள் காதில் தேனருவி பாயும். உங்கள் முகம் அன்றலர்ந்த செந்தாமரை போல் எந்நேரமும் ஒளிவீசுமே அம்மம்மா! உங்கள் முகம் பார்த்து எங்கள் கவலைகள், கஷ்டங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட இருள் போல் ஓடி ஒளிந்து விடுமே! எனக்கு எந்நேரமும் அறிவுரையும் ஆறுதலும் சொல்வீர்களே! உங்கள் பொன்மொழிகள் பசுமரத்து ஆணி போல் என்றென்றும் என்மனதில் பதிந்திருக்கும் இறுதிவரை எனக்கு இனி அறிவுரைகள் சொல்வதற்கு நாதியில்லையே! ஒவ்வொரு வாரமும் என்வரவுக்காய் நேரம் பார்த்து வாசலிலே காத்திருப்பீர்களே அம்மம்மா! கண்தெரியா விட்டாலும் காலடியின் ஓசையிலே என் வரவை உணர்ந்து லோயி வந்துவிட்டாயா என்று புன்சிரிப்புடன் வரவேற்பீர்களே! அம்மம்மா! என்றழைக்க உங்களிற்கு நான் ஒருத்தி மாத்திரம்தான் இருந்தேனே! இனி நான் யாரைத்தான் அம்மம்மா என்றழைக்க! மயங்கி விழுந்து வீட்டீர்கள் என்று வந்து சொன்னார்களே! சுகமாக இருந்தீர்களே! இருந்தாற்போல் என்ன நடந்ததென்று ஓடோடி வந்தேனே! கடைசி நேரம் உங்கள் முகத்தை பார்க்கக்கூட விடாமல் காலன் அழைத்துவிட்டானே! கனவில் கூட நினைக்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களை இந்நிலையில் பார்ப்பேன் என்று நித்திரை கொள்வதுபோல் படுத்திருந்தீர்களே! அம்மம்மா நீங்கள் ஒருசிறு உயிரிற்குக் கூட தீங்கு நினைக்கமாட்டீர்களே! அதேபோல் கடவுள் உங்களை கஷ்டப்படுத்தாமல் தன் கூட அழைத்துவிட்டார். கண்தெரியாவிட்டாலும் எங்கள் எல்லோருக்கும் சிறந்த வழிகாட்டியாக இருந்தீர்களே! உங்கள் இடத்தில் இனி ஒருவரையும் ஒப்பிடவே முடியாதே! உங்கள் உயிர் பிரிந்தாலும் என்றேனும் குன்றின் மேல் ஏற்றிய சுடர் விளக்காய் எங்கள் எல்லோர் மனதிலும் ஒளிவீசி நிலைத்திருப்பீர்கள். மறுபிறவி என்று ஒன்று இருந்தால் நான் உங்கள் பேத்தியாகவே பிறக்க விரும்புகின்றேன். அம்மம்மா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பேர்த்தி
பா. நாகலோயினி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்பு அப்பம்மா

எத்தனை துன்பங்கள் வந்தபோதும்
சிரித்துக் கொண்டே இருந்த – ஒளி
வடிவானவளே கண்ணம்மா
என் அன்பு அப்பம்மா !.........

எமக்கு நற்பல கதைகளுடன்
அறிவுரை வழங்கி எம்மை – நல்
வழிகாட்டியவளே அன்பம்மா
என் பாச அப்பம்மா !........

அப்பம்மா ! அப்பம்மா ! என்று
வாயாற கூறிய எம்மை – வாய்
அடைக்கச் செய்து அந்தோ
என்று விட்டுச் சென்ற மர்மம் தான் என்னவோ? ........

பேரன்
ச. நிறஞ்சன்

## என்னருமை அப்பம்மா!

அப்பம்மா ! அப்பம்மா !
என்னருமை அப்பம்மாவே !
தத்தித் தத்தி நடந்து வந்து
அப்பாமா வென்றழைப்பேன் அந் நாளில்
அருகில் வந்து கதை கூறச் சொல்வேனே !
தித்திப்பாய் பல கதைகள்
நீர் சொல்லக் கேட்டேனே !
நல்ல வார்த்தைகள் கூறிடுவீர்
நற் புத்தியும் புகட்டிடுவீர்
எங்களுடன் கதைப்பதற்கு
ஆசையாய் அழைப்பீரே !
நாமருகில் வந்து நிற்க
எங்கு சென்றீரோ !
ஓடி மறைந்தீரோ !

பேரன்
ச. துவாகரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்திரர்கள் புலம்பல்

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாட்சுமந்து
முத்தாக பெற்றெடுத்த புத்திரர்கள் நாமிருக்க
காலன் அணைத்தனனோ கலங்க எமை வைத்துவிட்டு
உத்தமியே உன்னிய வார்த்தைகளை எப்போது
கேட்போம் அம்மா

## புத்திரிகள் புலம்பல்

மூச்சுக்கு முன்நூறு தரம் அம்மா வென்றழைப்போமே
அலுக்காமல் சலிக்காமல் அன்பாக அறிவுரைகள் சொல்வீர்களே
தனிமரமாய் நிற்கும் எங்களுக்கு தோப்பாக இருந்தீர்களே
சோகத்தில் எமை ஆழ்த்திவிட்டு திடீரென மறைந்தீர்களே

## மருமக்கள் புலம்பல்

குடும்பத்தின் தலைவியே குலவிளக்காயமைந்தவளே
எம் அருமை மாமியே மாதாவை யொத்தவளே
மாமியார் கொடுமைதனை அறியாமல் காத்தவளே
உன் அன்பான வதனத்தை காண்பதுதான் எப்போதம்மா

## பேரப்பிள்ளைகள் புலம்புதல்

வெண்மதி போன்றவளே அம்மம்மா எங்கள் அப்பம்மா
நீ உவகையுடன் அழைக்கையிலே எங்கள் யுள்ளம்
குளிரவைப்பாய்
ஓடி வந்து யுன்னிடத்தில் தஞ்சமென வந்தடைவோம்.
எத்திக்கில் சென்றடைவோம் இனிய மொழி கேட்பதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிநவிலல்



எமது அன்புத் தெய்வமாம் அன்னையின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு வருகை தந்து அவருடைய இறுதிக் கரியையில் பங்குபற்றியவர்களுக்கும் ஒத்துழைப்புக்கள் நல்கியோருக்கம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்

உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு

எதை நீ படைத்திருந்தாய்? அது வீணாவதற்கு

எதை நீ எடுத்துக் கொண்டாயோ. அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது

எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது

எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது

மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.

**'இதுவே உலக நியதியும்**
**எனது படைப்பின் சாராம்சமுமாகும்'**

பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்

சரணியா ஓவ்(f)செற் பிறிண்ரேர்ஸ் காசிப்பிள்ளை கட்டிடம், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org